# உங்கள் முடிவு இங்கு உள்ளது

உங்கள் முடிவின் விளைவு மற்றும் அதற்கான காரணம் ஆகியவற்றை ஒழுங்கமைத்து ஓர் கடிதத்தை இத்துடன் இணைத்திருக்கிறேன். நீங்கள் இதைப் புரிந்து கொள்கிறீர்கள் எனவும், நீங்கள் பெற்றுக் கொண்ட சேவையைக் குறித்து நீங்கள் திருப்தியடைந்திருக்கிறீர்கள் எனவும் நான் நம்புகிறேன்.

## புகார்கள் அல்லது கேள்விகள்

உங்களது முடிவைப் பற்றியோ அல்லது எங்களது சேவையைப் பற்றியோ உங்களுக்கு ஏதேனும் புகார்களோ அல்லது கேள்விகளோ இருக்கும் பட்சத்தில், நீங்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்:

தொலைபேசி வாயிலாக 0800 096 1928 என்ற எண்ணிலும், தொலைநகல் வாயிலாக 0800 096 1929 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்

திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 மணி முதல் மாலை 4.30 மணி வரை நீங்கள் எங்களைத் தொலைபேசியில் அழைக்கலாம். ஒரு தரைவழி தொலைபேசி இணைப்பிலிருந்து நீங்கள் இலவசமாக அழைக்கலாம். நீங்கள் ஒரு மொபைல் தொலைபேசியைப் பயன்படுத்தினால், நாங்களே உங்களைத் திரும்ப அழைத்துப் பேசுவோம்.

அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ள:

சார்பற்ற மறுஆய்வு சேவை
இலவச அஞ்சல்

தொலைநகல் வாயிலாக 0121 606 2184 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்

நீங்கள் பார்வையற்றவராயிருந்து எங்களது கடிதம் உங்களுக்கு பிரெய்லி மொழியில் அல்லது ஒலிநாடா வடிவில் அல்லது பெரிய அச்சுப்படிவத்தில் தேவைப்படுமானால், தயவுசெய்து 0800 096 1928 என்ற எண்ணில் எங்களை அழையுங்கள்.

வேறொரு மொழியில் எங்களோடு பேசுவதோ அல்லது எங்களுக்குக் கடிதம் எழுதுவதோ அவசியமாகிற பட்சத்தில், அதற்கும் நாங்கள் ஏற்பாடு செய்ய முடியும். 0800 096 1928 என்ற எண்ணில் எங்களுக்கு தொலைபேசியில் அழையுங்கள் மற்றும் இது குறித்து நாங்கள் உங்களுடன் கலந்துரையாடுவோம்.

## உங்களுக்கான எங்கள் வாக்குறுதி

எங்களால் முடிந்த மட்டும் கூடிய விரைவில், வழக்கமாக 15 நாட்களுக்குள், உங்கள் புகார்களுக்கு நாங்கள் முழுமையாக பதிலளிப்போம். சில நேரங்களில் மேற்கொண்டு நாங்கள் விசாரணை நடத்த வேண்டியிருக்கும் அல்லது ஜாப்சென்டர் பிளஸில் இருந்து உங்கள் ஆவணங்களை வாங்க வேண்டியிருக்கும், அதற்கு கூடுதல் காலம் ஆகலாம்.

நீங்கள் புகார் செய்தால், நாங்கள் நியாயமான முறையில் உங்களிடம் நடந்துகொள்வோம். நாங்கள் எதையாவது தவறாக செய்து விட்டால், அதற்காக மன்னிப்பு கோரிவிட்டு அதை சரிசெய்து விடுவோம்.

irs
Independent Review Service
for the Social Fund

## பிற உதவி

பின்வரும் நிறுவனங்களால், உங்களுக்கு உதவி செய்து பொதுவான ஆலோசனையையும், ஆதரவையும் உங்களுக்குக் கொடுக்க முடியும். இந்த நிறுவனங்களால் வழங்கப்படுகிற தகவல்களுக்கு சார்பற்ற மறுஆய்வு சேவை பொறுப்பானதல்ல.

### குடிமக்கள் ஆலோசனை மன்றம் (சிஏபி- சிட்டிசன் அட்வைஸ் பீரோ)

சட்டம், பணம் மற்றும் பிற பிரச்சினைகள் குறித்த இலவச ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்கு உங்கள் பகுதியிலுள்ள சிஏபி ஓர் நல்ல இடமாகும். உங்கள் பகுதியிலுள்ள சிஏபி-யை, தொலைபேசி புத்தகத்திலோ அல்லது இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் உள்ள சிஏபி-யை www.citizensadvice.org.uk என்ற இணையதளத்திலோ அல்லது ஸ்காட்லாந்தில் உள்ள பியூராக்ஸ் என்னுமிடத்தில் உள்ள சிஏபி-யை www.cas.org.uk என்ற இணையதளத்திலோ நீங்கள் கண்டு கொள்ளலாம்.

### சமுதாய சட்ட ஆலோசனை (சிஎல்ஏ - கம்யூனிட்டி லீகல் அட்வைஸ்)

சட்ட உதவிக்கு நீங்கள் தகுதியடைகிற பட்சத்தில், கடன், வீட்டுவசதி, வேலைவாய்ப்பு, கல்வி, நலவாழ்வுப் பலன்கள் மற்றும் வரிக் கடன்கள் ஆகிய பிரச்சினைகளுக்கு தொலைபேசி வாயிலாகவே இலவசமான மற்றும் இரகசியமான உதவியை சமுதாய சட்ட ஆலோசனை உங்களுக்கு வழங்க முடியும். 0845 345 4 345 என்ற எண்ணில் எங்களை அழையுங்கள் அல்லது கீழுள்ள இணையதளத்திற்குச் செல்லுங்கள்: www.communitylegaladvice.org.uk

### ஏஜ் கன்செர்ன் மற்றும் ஹெல்ப் த ஏஜ்டு

முதியோரின் வாழ்வை மேம்படுத்துவதற்காக தங்களை அர்ப்பணித்துக் கொள்ளும் புதிய தேசிய சேவை அமைப்புகளை உருவாக்குவதற்காக ஏஜ் கன்செர்ன் மற்றும் ஹெல்ப் த ஏஜ்டு ஆகியோர் ஒன்றாக இணைந்திருக்கிறார்கள். 50 வயதிற்கு மேற்பட்ட அனைவரும், அவர்களுடைய வாழ்க்கையில் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதை உறுதி செய்து கொள்வதற்கான ஆதரவை அவர்கள் வழங்குகிறார்கள். இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் உள்ளவர்கள், இரகசிய ஆலோசனை மற்றும் ஆதரவிற்கு அவர்களை நீங்கள் 0800 009 966 என்ற எண்ணில் அழைக்கலாம் மற்றும் ஸ்காட்லாந்தில் உள்ளவர்கள் 0845 125 9732 என்ற எண்ணில் அழைக்கலாம் அல்லது www.helptheaged.org.uk என்ற அவர்களது இணையதளத்திற்குச் சென்று பார்க்கலாம். www.ageconcern.org.uk

### நேஷனல் டெப்ட்லைன்

கடன் பிரச்சினைகளை எப்படிக் கையாளுவது என்பது குறித்து இலவச, இரகசியமான மற்றும் சார்பற்ற உதவியை நேஷனல் டெப்ட்லைன் தொலைபேசி வாயிலாகவே வழங்குகிறது. அவர்களுடைய ஹெல்ப் லைனை 0808 808 4000 என்ற எண்ணில் நீங்கள் இலவசமாக அழைக்கலாம். மேலும் அவர்களது பிரசுரங்களை www.nationaldebtline.co.uk என்ற இணையதளத்திலிருந்தும் தரவிறக்கிக் கொள்ளலாம்.

### சட்டவிரோதமாக கடன் கொடுத்தல் தொடர்பான நேரடித் தொலைபேசி இணைப்பு

கடன் கொடுப்பதற்கான உரிமம் வைத்திராத ஒருவரிடமிருந்து நீங்கள் கடன் வாங்கியிருந்தால், சட்டத்தை நீங்கள் மீறவில்லை - அவர்கள் தான் மீறியிருக்கிறார்கள். சட்டவிரோதமாக கடன் கொடுத்தலை தடுக்கும் குழு, நாடு முழுவதிலும் இது போன்று கடன் கொடுப்பவர்களை விசாரித்து தண்டனை வாங்கிக் கொடுக்கிறது மற்றும் முறையான நிதிசார்ந்த ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவும் மக்களுக்கு உதவி செய்கிறது. கடன் கொடுப்பவர்கள் பற்றியத் தகவல்கள் ஏதும் உங்களுக்குத் தெரிந்தால், 24 மணி நேர இரகசிய நேரடித் தொலைபேசி இணைப்பில் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்; 0300 555 2222 என்ற எண்ணை அழையுங்கள்.

நீங்கள் எங்களுக்குத் தருகிற தகவல்களை நாங்கள் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதை எங்களது அந்தரங்கக் கொள்கை விவரிக்கிறது. இது வேண்டுகோளின் பேரில் கிடைக்கப்பெறுகிறது அல்லது www.irs-review.org.uk என்ற எங்களது இணையதளத்தில் கிடைக

## சட்டமும், உங்களது உரிமைகளும்

உங்களது புகார் அல்லது கேள்விக்கு ஓர் பதிலை நாங்கள் கொடுத்ததும், அது உங்களுக்கு திருப்தியளிக்கவில்லை என்றால் எங்களுக்கு எதிராக வழக்கு தொடுப்பதற்கான உரிமைகளும் உங்களுக்குள்ளது. வழக்கறிஞர்கள், குடிமக்கள் ஆலோசனை மன்றங்கள் அல்லது சட்ட மையங்களிலிருந்து கொஞ்சம் சட்ட உதவியையும் நீங்கள் பெற வேண்டிய அவசியம் ஏற்படலாம். சார்பற்ற மறுஆய்வு சேவைக்குப் பின்னரும் உங்களது முடிவில் நீங்கள் திருப்தியடையாத பட்சத்தில் உயர் நீதிமன்றத்தை அணுகலாம் (சட்ட மறு ஆய்வு என அறியப்படுகிறது). எங்களது நடவடிக்கைகள் அல்லது சேவை உங்களுக்குத் திருப்தியாக இல்லையென்றால் நாடாளுமன்ற மற்றும் சுகாதாரச் சேவை குறைதீர்ப்பாளரை அணுகலாம்.